IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# கலித்தொகையில் கருத்து வெளிப்பாட்டுத் திறன்கள்

**ம.முருகன்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் உயராய்வு மையம்
யாதவர் கல்லூரி
மதுரை-14

**முன்னுரை**

புலப்பாட்டு நெறி என்பது ஒரு கருத்தை பிறர் அறியும் வண்ணம் எடுத்துக்கூறுவது ஆகும். இந்தச் சொல் “Rhetoric என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து புலப்பாட்டுநெறி என்கிற இலக்கணம் அறிமுகமாகிறது. படைப்பாளி தாம் சொல்லவந்த செய்தியை அல்லது கருத்தை வாசகனிடம் சரியாக உணர்ச்சியோடு கொண்டு செல்லப் பயன்படுத்தும் உத்தியே வெளிப்பாடு என்பதாகும். ஓர் இலக்கியத்தின் வெற்றி தோல்விகளுக்கு இவ்வெளிப்பாட்டு உத்தியே காரணமாக அமைகிறது. அழகான உவமைப் பயன்பாடு, எளிமையான நடை, நுட்பமான பகுத்தறிவுத்திறன், வேண்டுகோள், அடையோடு தொடங்கும் மரபு, அஃறிணை மூலம் உயர்நிலையை விளக்கும் பாங்கு ஆகியவை சங்கத்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் வெளிப்பாட்டு முறையாகும்.

**தமிழில் புலப்பாட்டுநெறிகள்**

கிரேக்க இலக்கியத்தில் புலப்பாட்டு நெறியின் ஆரவாரமும், ஆர்ப்பரிப்பும் பண்டைத்தமிழ் இலக்கியங்களில் இப்புலப்பாட்டு நெறி இல்லை எனலாம். பண்டைத்தமிழ் இலக்கியத்தில் புலப்பாட்டுநெறி தனியொரு வகைமையாக வளரவில்லை. சொற்போர்கென்று கிரேக்கத்தில் இருந்தது போலத் தனித்தொரு பயிற்சியும் அளிக்கப்படவில்லை. புலவர்கள் அனைவரும் புலப்பாட்டு நெறியாளராயின் “வஞ்சினம் உரைத்த வல்வில் மறவர் அனைவரும் செவ்வேல் வீரர்களாயினர்."

“புலப்பாட்டு நெறியில் மிகச்சிறந்து விளங்கிய கூடற்கிழார், புலத்துரை முற்றிய அடைமொழி பெற்று புலத்துரை முற்றிய கூடலூர் கிழார், பண்டைத் தமிழ்ப்புலவர்கள் கைக்கொண்ட புலப்பாட்டு நெறியுள் அங்கமென்பதைத் தலையாயதெனலாம்." கிரேக்கத்தில் அங்கதப்பாக்கள் அருகிலே காணப்படுகின்றன. பண்டைத்தமிழ் இலக்கியத்தில் தொடக்கக் காலந்தொட்டே அங்கதப்பாக்கள் ஆட்சி செய்தன. செம்பொருளாகவும், பழிகரப்பாகவும் சங்க இலக்கிய பாடல்கள் பல அமைந்துள்ளன.

புலவர்கள் தம் பாடல்களில் புலப்பாட்டுநெறிகளை பல்வேறு வகைகளில் வெளிப்படுத்தியுள்ளனர். அவற்றுள் அங்கதம், வஞ்சினம், வருணனை, காதல் ஆகியவை முக்கிய இடம்பெறுகின்றன.

**இலக்கியங்களில் வெளிப்பாடு**

இலக்கியம் என்பது ஏதாவது ஒரு நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு படைக்கப் படுவதாகும். புலவனுடைய அனுபவத்தின் வெளிப்பாடு இலக்கியமாகிறது. புலவனுடைய அனுபவம் மட்டுமே ஓர் இலக்கியத்தை உருவாக்கிவிட முடியாது. “கணையாவது விரும்பிய விளைவை உண்டாக்கும் திறம்” என்பார்” ஆபர்குரோம்பீ ஓர் இலக்கியத்தை விளக்குவதற்கு வெளிப்பாடு, குறியீடு ஆகிய இரண்டையும் குறிக்கத்தக்க ஒரு சொல் தேவைப்படுகிறது. உணர்விணைப்பு (Communication) என்ற சொல் அவ்விரண்டையும் குறிப்பதாகும். இலக்கியம் வேறு எத்தகைய சிறப்பியல்புகள் கொண்டிருப்பினும் உணர்த்தும் ஆற்றல் அதன்கண் இல்லையெனில் அது இலக்கியமாகாது. எனவே உணர்த்தும் ஆற்றல் இல்லையெனில் இலக்கியமில்லை. இலக்கியத்தைப் பொருத்தமட்டில் அவற்றைப் பற்றிச் சிந்திக்கும் பொழுது வெளிப்பாடு என்ற சொல்லையும், குறியீடு என்ற சொல்லையும் நாம் ஒதுக்கிவிடக்கூடாது. இத்தகைய உணர்வினை இலக்கிய ஆசிரியருக்கும், படிப்பவருக்கும் இடையே இலக்கியம் ஏற்படுத்துகின்றது என்பதனை அறிய ~வெளிப்பாடு| என்ற சொல் பயன்படுவதாகும். வெளிப்பாடு, குறியீடு ஆகிய இரு சொற்களும் சிறப்பான பொருள் கொள்ளத்தக்கன. புலவனின் அனுபவத்தை மற்றொருவரின் உள்ளத்தில் முழுமையாகப் பதிவதற்கு ஏற்ற வடிவத்தை வெளிப்பாடு கொண்டிருத்தல் வேண்டும்.

**கனவு மூலம் கருத்தை வெளிப்படுத்தல்**

நெய்தற் தலைவி காதல் நெஞ்சத்து உறுதி இழந்து அரற்றுபவள். அவள் கனவிலும், நனவிலும் மயங்கி நிற்கும் காட்சியைச் சங்கப்பாடல்கள் தெளிவாகப் புலப்படுத்தி நிற்கின்றன. காகம், இறால் மீனை விரும்பியுண்ணும் பகலில் தான் விழைந்த உணவினைத் தேடிக் கிடைக்காமல் தளர்ந்து தாழையின் கிளையில் விழுந்தது. நள்ளிரவில் தான் விரும்பிய இறால்மீனை உண்பதாகக் கனவு காண்கிறது. இக்கனவை ஓர் உள்ளுறை வாயிலாகக் கவிதையோடு இணைத்துப் பார்க்கலாம். உள்ளுறை உவமம் என்பது குறிப்பாகப் பொருளை உணர்த்தும் உத்திகளில் தலைசிறந்தது. ஒரு செய்தியை வெளிப்படையாக விளக்குவதைவிடக் குறிப்பாக உணர்த்துவதற்கு மிக்கத்திறன் தேவை. பன்னெடுங்காலமாக வளர்க்கப்பெற்ற இலக்கியப் பரம்பரையின் முதிர்ந்த கனியாகும். உள்ளுறை உவமம் போன்ற குறிப்புப் பொருள் நிலைகள் இலக்கியங்களில் விளைந்தன. சொல்ல வேண்டியதைச் சொல்லாமல் சொல்ல இவ்வுத்தித் தேவைப்பட்டது.

நெய்தற்கலி காட்டும் மற்றொரு தலைவி தான் நயந்த தலைவனைக் கனவில் காணும் வாய்ப்புப் பெறுகின்ற அவள் துயர் அகலவில்லை. கனவினை நனவெனல் எண்ணிப் புல்லி அம்மருள் நோக்கிக் கனவென உணர்ந்து நெஞ்சம் கலங்குகிறாள்.

***"நனவெனப் புல்லுங்கால் காணாளாய்க் கண்டது
கனவென உணர்ந்து பின் கையற்றுக் கலங்கும்" (கலி.126)***

எனப் பேசுகிறாள்.

பாலைக்கலியில் மற்றொரு பாடலில் பலநாள் வராது வாட்டிய தலைவனைக் கனவிற் கண்டதும் விரைந்து பற்றினாள். வெறுங்கையைப் பிசைந்தவள் உணர்வு பெற்றாள். கையுள் அகப்பட்டவள் கண்படாது மறைந்து விட்டானே என ஏங்கி உறைகின்றாள்.

***"எள்ளி யிருக்குவேன் மற்கொல்லா நள்ளிருள்
மாந்தர் அடிகொண்ட கங்குற் கனவினால்
தோன்றினனாகத் தொடுத்தேன் மன்யான் தன்னைப்
பையெனக் காண்டு விழிப்ப யான் பற்றிய
கையுளே மாய்ந்தான் கரந்து." (கலி.142)***

நனவில் அவன் பிரிவால் நைந்தவள் கனவில் அவன் அணியால் தெளிகின்றாள். கனவு கலந்துவிடுகிறது. எனினும் தலைவியின் தெளிவு பெற்ற நெஞ்சம் அழியவில்லை. கனவிற் கண்டதன் தலைவனை நனவிற் காணலாம் என்ற நம்பிக்கையால் உயிர் வாழ்கின்றாள். இதை,

***"கனவிற் கண்டேன் தோழி காணதகக்
கனவின் வந்த கானலஞ் சேர்ப்பன்
நனவின் வருதலும் உண்டெனா
அனைவரை நின்ற தென் அரும் பெறலுயிரே" (கலி.128)***

எனும் பாடல் காட்டுகிறது

**குறிஞ்சிக் கலியில் கனவுகள்**

குறிஞ்சிக் கலியில் கனவுகள் தோழி வாயிலாக உணர்த்தப்படுகின்றன. குறிஞ்சி நிலத்தில் இயல்பாகக் காணப்படும் கருப்பொருட்களே கனவின் கூறுகளாக அமைகின்றன. கால மலர்ச்சியின் அடிப்படையில் குறிஞ்சிக் கலிப்பாடல் ஒன்று அமைந்துள்ளது. இப்பாடல் தோழி தலைவனுக்குத் தலைவியின் நிலையைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது. மலைச்சாரலில் வேங்கை மலர் மலரத் தொடங்கிய காலம் புலியொடு பொருந்தா யானை ஒன்று அயர்ந்து புலியின் நிழலில் துஞ்சுகின்றது. யானையின் துயில் திடீரென்று கலைகின்றது. திடுமென எழுந்து தன் கோடுகளால் வேங்கை மரத்தைத் தாக்கி அதன் கிளைகளை முறிக்கின்றது.

ஒருகால் புணர்ந்தும் பலகால் பிரிந்தும் அமைவது குறிஞ்சி காட்டும் களவு வாழ்க்கை கனவு போல் தோன்றி மறைகிறது. இது பற்றிக் குறிஞ்சிப் புணர்ச்சியைத் தோழி கனவிற்புணர்ச்சி என்று குறிக்கின்றாள். தலைவன் வரைவு மலிந்து வருகின்றமையை மகிழ்வுடன் தலைவி கூறும் தோழியின் கூற்று வரைந்து கூடி வாழும் இல்வாழ்க்கைக் கனவாகிய வாழ்வின் நனவாகக் காட்டுகிறது.

***"புனவேங்கைத் தானுறைக்கும் பொன்னுறை முன்றில்
நனவிற் புணர்ச்சி நடக்குமா மன்றோ
நனவிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே
கனவிற் புணர்ச்சி கடிதுமட்டும் அன்றே" (கலி.39)***

என்பதை அறியமுடிகிறது

**உரையாடலின் கருத்து வெளிப்பாடும்**

இயல், இசை, நாடகம் என்று தமிழை மூன்றாகப் பிரித்து ~முத்தமிழ்| என்றே வழங்கி வந்துள்ளனர். கலித்தொகை நாடகத்திற்கான வடிவை பெற்றிருக்கின்றன என்பதை தொல்காப்பியர் தமது நூற்பாவில் கூறுகிறார். கலித்தொகையில் ஒவ்வொரு பாட்டும் தனித்தனி செய்யுள்களாக அமைந்துள்ளன. ஒவ்வொரு பாடலிலும் நாடகக் கூறுகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

***“நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்***
***பாடல் சான்ற புலனெறி வழக்கம்***
***கலியே பரிபாட்டாயிரு பாங்கினும்***
***உரியதாகு மென்மனார் புலவர்"***

எனத் தொல்காப்பியர் கலித்தொகை நாடகப்பங்கு பெற்று வருவதைச் சுட்டிக்காட்டுகிறார்.

கலித்தொகையில் அடங்கியுள்ள ஐந்து திணைப் பாடல்களிலும் உரையாடல் வடிவம் காணப்படுகின்றன. அவற்றில் ஒரு சில பாடல்களை மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு அவற்றில் உரையாடல் மூலம் எவ்வாறு கருத்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்ற நிலையில் இவ்இயல் அமைந்துள்ளது.

நாடகத்தில் ஆசிரியர் உணர்த்த நினைப்பதை உணர்த்துவதற்கு உத்தியாக உரையாடலைக் கருவியாகப் பயன்படுத்துகிறார். அது எழுதப்பெற்ற நாடகத்தின் சிறப்புக்கூறாக உள்ளது. எழுதப்பெற்ற உரையாடல், நடிக்கும் போது நாடகமாகிறது. உரையாடல் என்பது நாடக ஆசிரியரின் தலையாய கருவியாகும். எனவே அதனை அவர் ஆற்றலுறப் பயன்படுத்த வேண்டும். இல்லையேல் நாடகம் சிறப்புற அமையாது. புதின ஆசிரியரைப் போலத் தம் கருத்தை அவர் பல பகுதிகளில் விளக்கிக்கூற இயலாது. அதனை உரையாடல் வாயிலாகவே தான் உணர்த்த வேண்டும். அல்லது உரையாடலின் படி நிகழும் செயல் வாயிலாக உணர்த்த வேண்டும். கலித்தொகையில் இந்த உரையாடல் போக்கு எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதனையும் கலித்தொகையில் இந்த உரையாடலின் போக்கினையும் இவ்வியலில் ஆராயப்படுகிறது.

**உரையாடலில் கருத்து வெளிப்பாட்டுத் திறன்**

உரையாடல் என்பது வாய்மொழியில் தான் நிகழ்கின்றது. இவை வினா எழுப்புவது, விடை சொல்வது என்ற வகையில் அமையும் ஒரு பொருள் பற்றியோ அல்லது ஒருவரைப் பற்றியோ விவாதிப்பதும், கருத்துரைப்பதும் ஆகும். சங்க இலக்கியங்களில் ஒருவரது தனிப்புலம்பலையும், தன் நெஞ்சிற்குக் கூறுதலையும் உரையாடலாகக் கொள்ளலாம்.

உரையாடல் என்பது மனிதனின் அன்றாட வாழ்க்கைச் சூழலில் நிகழ்கின்ற நிகழ்ச்சியாகும். இது பல்வேறு விதமான நிலைகளில் வெளிப்படுகின்றது. அது இடம்பெறும் களங்களைப் பொறுத்தே அமையும்.

உரையாடல் என்பதற்கு ~லேபவ் மற்றும் பன்ஸல் தரும் விளக்கம் உரையாடல் என்ற வடிவம் உரைத்தல் என்ற செயலை அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது. உரையாடலை ஒரு பெரும் செயலாகவும் அவை தொடர்ச்சியான பல உரைத்தல் செயல்களாகவும் கொண்டுள்ளது.

"கின்கிபீளர்|, ~கூத்தாய என்பவர்கள் வகுப்பறை உரையாடலை ஆய்வு பொருளாகக் கொண்டு அந்த உரையாடல் நிகழ்ச்சியின் அமைப்பை விளக்குகின்றார். "சூழல் என்பது உரையாடல் நிகழுகின்ற களமாகும். இந்தக்களம் உரையாடல் நிகழும் சுற்றுப்புறம் சமுதாய நெறிமுறைகள் உரையாடலில் நிகழும் அனுபவ இணக்கம் போன்றவற்றை உள்ளடக்குவதாக அமையும்"7 என்று உரையாடலுக்கு விளக்கம் தருகின்றார்.

**உரையாடலின் உத்திகளும் பண்புகளும்**

உரையாடுதல் செய்கையையும் உரையாடும் முறையையும் நெறிபடுத்த உதவுகின்றன. உரையாடல் செய்கை என்பது ஒருவகைப் பழக்கவழக்கம் என்பதாகும். கருத்துப் பரிமாற்றம் சிறப்பு நிகழ்வும் தேவையான தகுந்த உரைச் செயல்களையும் உரைத் தொடர்களையும் பயன்படுத்தும் முறைகள் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

உரையாடல் சிக்கனம், பொருத்தம், ஓட்டம், ஆக்கத்திறன் ஆகிய பண்புகள் கொண்டதாய் இருத்தல் வேண்டும். நாடகத்தில் நிகழ்ச்சிப் போக்கு முதன்மையானது என்பதால் உரையாடல் வெறும் மனநிலையையோ சூழ்நிலையையோ மட்டும் குறிப்பிடுவதாக அமைதல் கூடாது. அவற்றுடன் நிகழ்ச்சிப்போக்கையும் விரைவான ஓட்டமுடையனவாகவும் சுருக்கமாகவும் இருத்தல் வேண்டும். நீண்ட உரையாடலாகவும் வரலாம். ஆனால் உரையாடல்கள் நாடகம் பார்ப்பவர் அல்லது படிப்பவர் கருத்தைக் கவருதல் வேண்டும். உரையாடல் இடத்திற்குப் பொருத்தமானதாகவும், நிகழ்ச்சியை விளக்குவனவாகவும் நிகழ்ச்சியின் ஓட்டத்தை முன் செலுத்தக் கூடியதாகவும் அமைதல் வேண்டும். நெடிய அளவொத்த மெதுவான பேச்சும் சில இடங்களில் இவ்விளைவுகளைத் தரும் எனினும் உரையாடல் சிக்கனமாக நம் நினைவில் கொள்ளும்படி அமையவேண்டும். அப்போது தான் உரையாடல் சிறந்து விளங்கும். பார்வையாளர்கள் மத்தியில் ஒரு இரசனையை ஏற்படுத்தும்.

**பொருத்தம்**

சூழ்நிலைக்கும் நாடகக் கதைமாந்தர் தன்மைக்கும் ஏற்புடையதாக உரையாடல் இருத்தல் வேண்டும். எல்லா வகையிலும் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பேசும் பாத்திரத்தின் இயல்புக்குப் பொருத்தமாக உரையாடல் அமைய வேண்டும். சூழ்நிலை யாரை நோக்கிப் பேசப்படுகின்றதோ அவருக்குப் பொருத்தமாகவும் அமைய வேண்டும் இதுவே உரையாடலுக்குரிய பண்புகளில் ஒன்றாக உள்ளது.

**ஓட்டம்**

உரையாடல் நிகழ்ச்சிப் போக்கை முன் செலுத்தும் பண்புடையாமை வேண்டும். அஃது எந்த நிலையிலும் நிகழ்ச்சிப் போக்கைத் தடை செய்வதாக அமைதல் கூடாது. இதற்காகவே தம்முள் எழும் எண்ணங்களைக் குறிக்கும் தனிமொழிகளையும் அரங்கினர் உணர்ரும் பொருட்டு நாடகக் கதைமாந்தர் வெளிப்படையாகப் பேசுகின்றனர்.

**முடிவுரை**

- கலித்தொகையில் காட்சிப் பின்புலத்தை வைத்துக் கருத்தை உணர்த்துகின்ற பாடல்கள் அதிகமாக உள்ளன. பாடலின் கருத்துக்களை எளிமையாகப் புரிந்து கொள்ள புலவன் இதுபோன்ற உத்திகளைக் கையாளுகின்றன. சங்ககால மக்களின் மன உணர்வுகளை வெளிப்படுத்துவதற்காகவே புலவர்கள் உயர்திணைகளுடன் அஃறிணைகளை ஒப்புமைகாட்டிக் காட்சியை விளக்கிச் சென்றிருக்கின்றனர்.
- காட்சிப் பின்புலம் மூலம் பல்வேறு விதமான கருத்துக்களைக் கலித்தொகையில் புலவர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர். இல்லற வாழ்வில் ஏற்படும் நிகழ்வுகளைக் காட்சிப்படுத்துதல், துன்ப நிகழ்வுகளை எடுத்துக்கூறுதல், நகைச்சுவை உணர்வின் மூலம் வெளிப்படுத்துதல் என்று இன்னும் பல நிகழ்வுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.
- புலவர்கள் காட்சிப் பின்புலத்தை நிறுவுவதற்கு உயர்திணைகளை அஃறிணைகளுடன் ஒப்புமைகாட்டிக் கருத்தை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

**துணைநூற்பட்டியல்**


ஆசிரியர் குழு, (ப.ஆ.) — கலித்தொகை மூலமும் உரையும்,
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
திருநெல்வேலி
இரண்டாம் பதிப்பு 1998

அகத்தியலிங்கம் — தொல்காப்பிய உருவாக்கம்
மெய்யப்பன் தமிழாய்வகம்
சிதம்பரம்
2008

இளம்பூரணர் (உ.ஆ), — தொல்காப்பியம் பொருளதிகாரம்,
கழக வெளியீடு,
சென்னை-625001